සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
## மூன்றாந் தவணைப் பரீட்சை - 2020
## சைவநெறி / ශෛව ධර්මය – II

சுட்டெண்:................................... தரம் : **10** நேரம்: 2 மணித்தியாலங்கள்

♦ **பின்வரும் வினாக்களில் முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.
   1) சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய விழுமியங்கள் இரண்டு தருக.
   2) வேதம் என்ற சொல்லின் பொருள் யாது?
   3) கன்னிகாதானம் என்றால் என்ன?
   4) சைவசமயிகள் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   5) இரதோற்சவம், சூர்ணோற்சவம் முதலிய உணர்த்தும் இறைவனது தொழில் எது?
   6) தடுத்தாட் கொண்ட புராணம் அமைந்துள்ள நூல் எது?
   7) கிராமியத் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய கலைகள் நான்கு எழுதுக.
   8) பஞ்சபூதங்கள் யாவை?
   9) சங்கம வழிபாடு என்பது யாது?
   10) இலங்கையில் மிக உயரமான கொடிக்கம்பத்தை கொண்ட ஆலயம் யாது?

2. 1) மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
   2) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.
      அ) “யாவர்க்குமாம் இறைவற்கு.”
      ஆ) “நாம் ஆர்க்கும் குடியல்வோம்”
      இ) “மீனா அடிமை உமக்கே”
      ஈ) “தண்ணளி வெண்குடை”
      உ) “கற்றவர் விழுங்கும்”

3. “பதி, பசு, பாசம் ஆகியன முப்பொருள்களாகும் சைவசித்தாந்தம்.”
   1) சைவசித்தாந்தம் குறிப்பிடும் பதியின் இரண்டு நிலைகளையம் குறிப்பிடுக.
   2) பசுவின் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.
   3) மும்மலங்களுள் ஆணவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

4. இலங்கையில் சைவமும் தமிழும் தழைக்கப் பணியாற்றிய ஈழத்துச் சான்றோர்களுள் சுவாமி விபுலானந்தர் குறிப்பிடத்தக்கவர்.
   1) சுவாமி விபுலானந்தர் இசைக்கலை சார்ந்தும் நாடகத்துறை சார்ந்தும் எழுதிய நூல்கள் யாவை?
   2) விபுலானந்தர் ஆசிரியராகத் திகழ்ந்த சஞ்சிகைகள் யாவை?
   3) விபுலானந்தரின் சமூகப்பணிகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக.

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது

5. "திருநாவுக்கரசர் சமணசமயம் சார்ந்து பின் சைவத்துக்கு மீண்டார்"
   1) திருநாவுக்கரசு நாயனார் "உழவாரப் படையாளி" என அடைக்கப்பட காரணம் யாது?
   2) திருநாவுக்கரசு நாயனாரின் அற்புதங்கள் மூன்று தருக.
   3) திருநாவுக்கரசு நாயனாரின் நின்றநெறி, முத்தி குருபூசைத்தினம், இறுதியில் பாடியப்பதிகம் ஆகிய விபரரங்களைக் குறிப்பிடுக.

6. "சடங்குகளின்றி நாட்டார் வழிபாடு எதுவும் இடம்பெறுவதில்லை"
   1) நாட்டார் வழிபாட்டின் மறு பெயர்கள் இரண்டு தருக.
   2) இலங்கையிலுள்ள பிரதான திரௌபதியம்மன் ஆலயங்கள் நான்கு தருக.
   3) வைரவரின் தோற்றப் பொலிவை விளக்குக.

7. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
   1) சைவவித்தியா விருத்திச் சங்கம்
   2) கந்தசஷ்டி
   3) வேதங்கள்
   4) திருமூலர்

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது

